30.01.2025 அ.வ. எண். 301/2018 பி.சா.1 கோபால்

<u>குறுக்கு விசாரணை</u>

இராணுவத்தில் சேர்க்க என்ன செலவு செய்தோம் என்றால் அப்போது சம்பளம் குறைவு ருத்தரமூர்த்தி கேட்கும்போதெல்லாம் பணம் கொடுத்தோம். காஞ்சிபுரத்தில் உள்ள வீட்டை விற்று ருத்தரமூர்த்தி ரூ.1,00,000/- பணம் எடுத்துக்கொண்டதாகவும் என் தகப்பனார் ரூ.1,00,000/- வைத்துக்கொண்டதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து ருத்தரமூர்த்தி பெயரில் தான் கிரய ஆவணம் உள்ளது என்றால் சரிதான், என் தகப்பனாரை ஏமாற்றி வாங்கிக்கொண்டார். ரூ.3,00,000/- சீட்டை ருத்தரமூர்த்தியே எடுத்துக்கொண்டதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, ஆளுக்கு ரூ.90,000/-க்கு சீட்டு கட்டினோம் ருத்தரமூர்த்தி இறந்தபிறகு நான் ரூ.90,000/-, என் தம்பி ரூ.90,000/-, வாதி ரூ.90,000/- செலுத்தினோம். சீட்டுதொகை செலுத்தியதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. சீட்டு கட்டியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தை நானும் என் தம்பியும் விவசாயம் செய்து வருவதாக தவறாக சொல்கிறேன் என்றும் வாதி தான் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். காஞ்சிபுரத்தில் இருந்த வீட்டை பொது சொத்தில் இருந்துவந்த வருமானத்தைக்கொண்டு கிரயம் பெற்று வீடு கட்டியதாக தவறாக சொல்கிறேன் என்றும் ருத்தரமூர்த்தி பணிநிறைவு பெற்று வந்த பணத்தைக்கொண்டு கிரயம் வாங்கி கட்டப்பட்ட வீடு என்றால் சரியல்ல, பொது சொத்து 4 ஏக்கரை விற்று எடுத்துச்சென்று வீடு கட்டிவிட்டார். பொது சொத்தை ருத்தரமூர்த்தி விற்று எடுத்துச்சென்று விட்டார் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. ருத்தரமூர்த்தி பெயரில் உள்ள சொத்து பாகம் கேட்டு நானோ, என் தம்பியோ வழக்கு தாக்கல் செய்யவில்லை. 2006 ஆம் ஆண்டு ருத்தரமூர்த்தி, வனராணி, கோவிந்தம்மாள், பாலசுந்தரம் ஆகியோரிடமிருந்து கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். கிரயம் வாங்கியபிறகு ருத்தரமூர்த்தி தான் அந்த சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் பொதுவாக தான் அனுபவித்து வந்தோம். ருத்தரமூர்த்தி எங்களை காப்பாற்றுவதாகவும், பாகம் பிரித்து கொடுப்பதாகவும் சொன்னதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல,

சொன்னது உண்மை. அசல் பத்திரத்தை எடுத்து வருமாறு தாங்கள் தான் சொன்னீர்கள், அசல் பத்திரத்தை எடுத்துவந்தபிறகு 60 செண்ட் கொடுப்பதாக சொன்னீர்கள் நான் ஆளுக்கு 50 செண்ட் கொடுங்கள் என்று சொன்னேன். நான் மேற்சொன்ன சங்கதியை தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சந்திரசேகரன் என்பவருக்கு வாதி 65 செண்ட் நிலத்தை விற்றுவிட்டார் என்றால் சரிதான். சந்திரசேகரன், சிதம்பரம், குமரேசன் ஆகியோர்களுக்கு விற்றுவிட்டார் என்றால் சரிதான். 65 செண்ட் நிலத்தை விற்பனை செய்தது சம்மந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை, நான் சொத்தை விடவில்லை. சொத்தை நான் விடவில்லை என்று தவறாக சொல்கிறேன் என்றும் வாங்கியவர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். பாக்கி சொத்திற்கான பட்டா வாதி பெயருக்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. தாவா சொத்து ருத்தரமூர்த்தியின் தனிப்பட்ட சொத்து என்றும் அதில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வாதி வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.